**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**OS No.61/2026**

**09.06.2026 பிவா.சா. 1 திரு. விக்னேஷ்குமார் த/பெ. பார்த்தசாரதி**

சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை

தமிழ்நாடு போக்குவரத்து தீர்ப்பாயத்தில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவை எதிர்த்து நானும், ஜனார்த்தனும் தனித்தனியாக மேல்முறையீடு செய்தோம் என்றால் சரிதான். தமிழ்நாடு போக்குவரத்து தீர்ப்பாயம் நான் தாக்கல் செய்த மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து விட்டு வாதி தாக்கல் செய்த மேல்முறையீட்டை அனுமதி செய்தது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான், என் அம்மா, ஏன் அம்மாவின் சகோதரிகள் ஆகியோர் சேர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் சி.ஆர்.பி தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி சி.ஆர்.பி மனுவில் இந்த வழக்கை ஆரணி ஆரணி உரிமையில் நீதிமன்றத்தில இருந்து மாற்றம செய்து உத்தரவிட்டு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த அசல் வழக்கு 31/2013 வழக்கையும் இணைத்து விசாரித்து முடிக்க உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் பதிவு சான்றிதழ் யாரிடம் உள்ளது என்றால் சென்னை வழக்கறிஞரிடம் அதனை கொடுத்துள்ளேன். ஆரணி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து பதிவு சான்றிதழ் மற்றும் பர்மிட்டை திரும்ப ஒப்படைக்குமாறு எனக்கு 2 மனுக்கள் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பதிவு சான்றிதழ் மற்றும் பர்மிட்டை ஆர்.டி.ஓவிடம் நான் ஒப்படைக்கவில்லை. தேவிகாபுரத்தில் இருந்த மளிகை கடை யார் பெயரில் இருந்தது என்றால் கோபால் நாயுடு பெயரில் இருந்து எனது பாட்டி ஜெயலட்மி பெயரில் மாற்றம் செய்யப்பட்டது. அதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி மளிகை கடை வெங்கடேசன் மற்றும் ஆர்.வி. குப்புசாமி ஆகியோர் பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. பேபி சரோஜாவின் உயிலை நான் படித்துள்ளேன். அந்த உயிலில் எனது பாட்டி "தற்போது வயதாகிவிட்ட காரணத்தினாலும், உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும் இந்த உயிலை எழுதுகிறேன்" என்று உள்ளது என்றால் சரிதான். அதனால் உயில் எழுதிய காலகட்டத்திலும் அதற்கு சில நாட்கள் முன்பும் அவரது உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது என்றால் சரியல்ல. ஆரணி வழக்கில் நான் தான் 7ம் பிரதிவாதி. அதில் நான் தாக்கல் செய்த பதிலுரையில் எனது தாத்தா வெங்கடேசன் எழுதிய உயில் உண்மையில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த உயிலை நான் எப்போது பார்த்தேன் என்று கேட்டால் 2014ல் பார்த்தேன். மேற்படி உயிலில் உள்ள புகைப்படம் எனது தாத்தா வெங்கடேசனுடையது. என்னிடம்

காண்பிக்கப்படும் அவரது உயிலில் உள்ள கையொப்பம் எனது தாத்தவுடையது தான். பேபி சரோஜாவிற்கு உடல்நிலை மற்றும் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்றும் அவருக்கு உயில் எழுதும் எண்ணம் எதுவும் இல்லை என்றும், அவர் எழுதியதாக சொல்லப்படும் உயில் அவரை ஏமாற்றி எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**

Additional District Judge,
Tiruvannamalai.